# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,111 — 1960 අප්‍රේල් 22 වැනි සිකුරාද — 22.4.1960

12,111 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு எப்றில் மாதம் 22 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் |
|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 95 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 96 |
| கேள்விப்பத்திர முடிவுகள்பற்றிய அறிவித்தல்கள் .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | — |
| ஆய விற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | — |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| ஏல விற்பனைகள் .. .. .. | — |
| நாணுவிதம் .. .. .. | — |


## பதவிகள்—வெற்றிடம்

### இலங்கை அரசினர் புகையிரதப் பகுதி

#### பிரதான இயந்திரவேலை இஞ்சினியரின் பகுதி—இரத்மலானை

இலங்கை அரசினர் புகையிரதப் பகுதியின் பிரதான இயந்திர வேலை இஞ்சினியரின் பகுதிக்கு தற்காலிக படம் வரை அறிஞர் தரம் II ற்கு, இரண்டு காலியிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பக்காரர்கள் இலங்கைப் பிரஜைகளாகவும், விண்ணப்பங்கள் அனுப்புமாறு கோரும் முடிவுறு தேதியன்று 21 வயதிற்கு மேற்பட்டவராகவும் 40 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும் என்பதோடு கீழ்க்காணுவனவற்றிற்கும் திருப்திகரமாக அத்தாட்சிப் படுத்தல் வேண்டும் :—

(ஏ) நன்று பொதுக்கல்வி பயின்றவராகவும் ;

(பீ) தொழில் நுட்பக் கல்லூரியில் முழுப்பயிற்சி பெற்ற ஏதாவது ஒரு எந்திரத் தொழில் தத்துவப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (இயந்திரவேலை எந்திரத் தொழில் ; மின் எந்திரவியல் ; அமைப்பெந்திரவியல் ; அல்லது அதற்குச் சமமான அல்லது அவற்றிலும் மேலான பரீட்சையில் அல்லது

(சீ) ஓர் எந்திரத்தொழில் நிலையத்தில் மூன்று வருடங்களுக்கு அதிகமாகப் படம் வரை அறிஞராகக் கடமையாற்றியவராகவோ, அல்லது

(டீ) மேலே (பீ) யில் குறிப்பிடப்பட்ட பரீட்சைகளுள் தொழில் நுட்பக் கல்லூரியில் எந்திரத்தொழில் மூன்று வருடகாலம் பயில வேண்டியதில் இரண்டு பரீட்சைகளில் படம் வரை அறிஞர் எந்திரத் தொழிலில் போதிய அனுபவத்துடன் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(3) தகைமைக்கும் அனுபவத்திற்கும் தகுந்தவாறு நியமனத்தின் போது வருடச் சம்பளம் ரூ. 1260—120—ரூ. 3780 என்ற விகிதத்தில் (ரூ. 2820 வருடத்திற்கு, உழைக்குமுன் வினைத் திறமைகாண்தடை) இருக்கும். இப்பதவி தற்காலிகமானதும் இளைப்பாற்றுச் சம்பளமற்றதும்.

4. தலைமை அதிபதி, இலங்கை அரசினர் புகையிரதப் பகுதி, மருதானை என்ற முகவரிக்கு கீழே தரப்பட்டிருப்பது போன்ற படிவத்தில் விண்ணப்பங்கள் 1960 ம் ஆண்டு மே மாதம் 13 ம் திகதி, மாலை 4 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியவாறு அனுப்பப்படல் வேண்டும். புகையிரதப்பகுதியின் எவ் உத்தியோகத்தருக்காவுதல் நேர்முகமாக விண்ணப்பங்கள் முகவரியிட்டு அனுப்பக்கூடாது.

5. எப்பொழுதாவுதல் நேர்முகப் பரீட்சைக்குவருமாறு பணிக்கப்பட்டால் விண்ணப்பதாரிகள் தங்களது சொந்தச் செலவில் மருதானையிலுள்ள இலங்கை அரசினர் புகையிரதப் பகுதியின் தலைமை அதிபதியின் அலுவலகத்திற்கு வருவதற்குச் சித்தமாயிருத்தல் வேண்டும்.

6. பிரதான இயந்திர வேலை இஞ்சினியர், இலங்கை அரசினர் புகையிரதப் பகுதி, இரத்மலானை என்ற விலாசத்திற்கு விண்ணப்பித்து மேலும் விபரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

7. அரசாங்க சேவையின் பதவிகளின் நியமனங்களுக்குத் தகுதியான பொது நிபந்தனைகளுக்கு இவ்வர்த்தமானியின் முதலாம் பகுதியின் தொடக்கத்தையும், இரண்டாம் பிரிவையும் பார்க்கவும்.

பி. டீ. றம்பால,
தலைமை அதிபதி.

தபால் பெட்டி 355,
கொழும்பு,
1960 ம் ஆண்டு எப்றில் மீ 11 ந் உ.

(மாதிரிப்படிவ விண்ணப்பப் பத்திரம்)

**இலங்கை அரசினர் புகையிரத பிரதான இயந்திரவேலை இஞ்சினியரின் பகுதிக்கு (தற்காலிக) படம் வரை அறிஞர் தரம் II ற்கு நியமன விண்ணப்பம்**

1. முழுப்பெயர் (பெரிய எழுத்தில்) :————.
குடும்பப் பெயர் :————.
மற்றும் பெயர்கள் :————.

2. தபால் விலாசம் :————.

3. (ஏ) இலங்கைப் பிரஜையாக இருந்தால் கீழ்க்காணும் விபரங்கள் தருக :
(i) வம்சாவழியா, அல்லது :————.
(ii) பதிவுசெய்யப்பட்டதினுலா :————.
(பி) பிறந்த இடம் :————.
(i) விண்ணப்பதாரர் :————.
(ii) விண்ணப்பதாரரின் தந்தை :————.
(iii) விண்ணப்பதாரரின் தந்தை வழிப்பாட்டான் :————.
(iv) விண்ணப்பதாரரின் தந்தை வழிப்பூட்டன் :————.

குறிப்பு.—விண்ணப்பதாரரும் அவரது தந்தையும் இலங்கையில் பிறந்தவரானுல் (i) ம் (ii) ம் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பதாரர் அல்லது அவரது தந்தை இலங்கையில் பிறவாதிருப்பின் (i), (ii), (iii), (iv) ம் நிரப்புதல் வேண்டும்.

4. பிறந்த திகதி :
13-5-60 ல் வயது :———.
வருடம் :———. மாதம் :———— நாள் :————

5. விவாகம், ஆனவரா/ஆகாதவரா ? :————.

6. தற்போதைய தொழில் :————.

7. தற்போது தொழில் இல்லாவிடில் கடைசியாகச் செய்த தொழில் :————.

8. கல்வித் தகைமைகள் :

பொது—

பாடசாலைகள் :————.

சித்தியடைந்த பரீட்சைகள் :————.

தொழில் நுட்ப :————.

எங்கே கற்றது :————.

சித்தியடைந்த பாடங்கள் :————.

9. மிகவும் பழக்கமும் அனுபவமும் உள்ள ஒவ்வொரு பாடங்களைப் பற்றியும் சுருக்கமாகத் தருக :————.

10. முன் அனுபவம் ஏதாவதிருப்பின் :————.

11. ஏதாவது குற்றவியல் வழக்கில் நீதிமன்றத்தில் குற்றவாளி யெனக் காணப்பட்டுள்ளீர்களா ? அப்படியானல் வழக்கு நடந்த தேதி, குற்றத்தின் விபரங்கள், தண்டனை, நீதிமன்றத்தின் பெயரும் வழக்கின் இலக்கமும் :————.

நான் இவ்விண்ணப்பப் பத்திரத்தில் எழுதியுள்ள விபரங்கள் யாவும் உண்மை என இத்தால் வெளிப்படுத்துகிறேன். என்னை திறமைக் குறைவுக்காக சேவையினின்றும் இளைப்பாறுமாறோ அல்லது அரசாங்க சேவையினின்றும் விலக்கவோ இல்லை எனவும் இத்தால் வெளிப் படுத்துகிறேன். இத்தால் தரப்பட்டிருக்கும் விபரங்கள் பொய் அல்லது பிழையானல் என்னைத் தெரிவு செய்யப்படமுன்பு செம்மையில்லை எனவும் கண்டு பிடித்தால் நான் தகைமை நீக்கம் செய்யப்படலாம் என்பதையும் நியமனத்தின்பின் கண்டு பிடிக்கப்பட்டால் நட்டமொ இன்றி என்னை வேலை நீக்கம் செய்யலாம் என்பதையும் அறிந்துள் ளேன்.

————

விண்ணப்பக்காரரின் ஒப்பம்.

திகதி :————.

(ஏ) விண்ணப்பம் சுருக்கமாகவும், சரியாகவும், தெளிவாகவும் விண் ணப்பக்காரரின் கை எழுத்தால் நிரப்புதல் வேண்டும்.

(பீ) விண்ணப்பத்துடன் பிரதிக் குணதிசயப் பத்திரங்கள் மூன்றுக்குக் கூடாமல் இணைக்கப்படல் வேண்டும்.

(சீ) இவ்விண்ணப்பம் அனுப்பும் உறையின் வெளிப்புறத்தில் " படம் வரை அறிஞர், தரம் II, (தற்காலிக) " எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

---

## கேள்விப்பத்திர அறிவித்தல்

### நீர்ப்பாசன இலாகா

மொனருகலை உப-பகுதியிலுள்ள தொம்பாவெல என்னுமிடத்தில் ஆளோட்டி வீடு கட்டுவதற்குரிய கேள்விப் பத்திரங்களை 1960 ம் ஆண்டு மே மாசம் 18 ந் திகதி புதன்கிழமை காலை 10 மணி வரைக்கும் பண்டாரவளையிலுள்ள பெரும்பாக பொறியியலாளர் ஏற்றுக் கொள்வார்.

கேள்விப்பத்திரங்கள் மொனருகலை உப-கந்தோரில் பெற்றுக்கொள்ள லாம். உப-கந்தோரில் பிளானகள் பார்ப்பதற்கும் வேறு விபரங்கள் அறிவதற்கும் வசதி அளிக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் அறிவதற் கும் வசதிஅளிக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் சீல் செய்து அனுப்பப்படல் வேண்டும்.

ஒரு கச்சேரியிலேனும் அல்லது மொனருகலை உப-கந்தோரிலேனும் ரூ. 25 கட்டுப் பணமாய் கட்டிப்பெற்ற பற்றுச்சீட்டை சமர்ப்பித்து 17.5.60 வரைக்கும் கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பக் காரர்கள் நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 15,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கோ பதிவு செய்துள்ளோராக இருக்க வேண்டும். கையிருப்பு வேலைகள் இருப்பின் அவ்வேலைகள் பற்றிய நற்சாட்சிப் பத்திரங்களோடு மனுச்செய்ய வேண்டும்.

ஒ. என். சந்திரரத்ன,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
உப-கந்தோர், மொனருகலை.

மொனருகலை,
1960 ம் ௵ ஏப்ரில் ௴ 5 ௳.

---

### இலங்கை போக்குவரத்துச் சபை

#### விற்பனவு அறிவித்தல்

கொழும்பு 5, கிருல வீதி 200 ம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்துச் சபை கேள்விப் பத்திரச் சபைத் தலைவரால் 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 29 ம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிவரை பின்வரும் பாவிக்கப்பட்ட வாகனங்களுக்காக முத்திரை யிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. கார்கள்

| | | | |
|---|---|---|---|
| போர்ட் செப்பிர் | .. | 1 ஸ்ரீ | 5031 |
| " " | .. | ஈ என் | 9879 |
| " " | .. | ஈ என் | 9709 |
| மெர்சிடஸ்—பென்ஸ் | .. | ஈ வை | 5414 |
| வொர்க்ஸ்வாகன் | .. | ஈ எல் | 8749 |
| " | .. | ஈ எல் | 8750 |

2. லாண்ட் றோவர் .. 1 ஸ்ரீ 1177

3. வான்கள்

| | | | |
|---|---|---|---|
| வொர்க்ஸ்வாகன் கோம்பி | .. | 1 ஸ்ரீ | 7542 |

4. மோட்டோர் சைக்கிள்கள்

| | | | |
|---|---|---|---|
| சன்பீம் .. | .. | ஈ எல் | 363 |
| " .. | .. | ஈ எல் | 909 |
| ரியம்ப் ரி. கப் | .. | ஈ என் | 8892 |
| ரியம்ப் .. | .. | ஈ என் | 1076 |
| ஜாவா .. | .. | ஈ என் | 7089 |

1 தொடக்கம் 3 வரையுள்ள இனங்களுக்கு ஒரு வாகனத்துக்கு ரூ. 100/- உம் ஒரு மோட்டோர் சைக்கிளுக்கு ரூ. 50/- உம் கட்டுப்பணமாகவிருக்கும்.

திருப்பிப் பெற்றுக்கொள்ளக் கூடியதான கட்டுப்பணங்கள் கொழும்பு 5, கிருல வீதி 200 ம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்துச் சபை பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் கட்டி, பற்றுச்சீட்டுகள் கேள்விப் பத்திரத்துடன் இணைக்கப்பட வேண்டும். என்வலப்பின் இடது பக்க மேல் மூலையில் " பாவிக்கப்பட்ட வாகனங்களுக்கான கேள்விப் பத்திரம் " என்று தெளிவாகக் குறிக்கப்படுதல் வேண்டும். தேர்ந் தெடுக்கப்படும் கேள்விப் பத்திரக்காரர் முழுத் தொகையையும் கட்டி ஐந்து நாட்களுக்குள் எடுத்துச் செல்லுவதற்குரிய ஒழுங்குகளைச் செய்ய வேண்டும்.

பொரலஸ்கமுவ வெரஹெரையிலுள்ள இலங்கை போக்குவரத்துச் சபை பிரதம இஞ்சினியரின் காரியாலயத்தில் 1960 ம் ஆண்டு எப்றில் 25, 26, 27 ம் திகதிகளில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 4.00 மணிக்கு மிடையில் மேற்கூறப்பட்டவற்றைப் பார்வையிடலாம். மேலதிக விபரங் களை வெரஹெரையிலுள்ள (எந்திரப்பொருள் உற்பத்தி) பிரதி பிரதம இஞ்சினியரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கொழும்பு,
1960 ம் ௵ ஏப்றில் ௴ 8 ௳.

செயலாளர்,
இலங்கை போக்குவரத்துச் சபை

---

### இலங்கை இராச விமானப்படை

கொழும்பு, பார்சன்ஸ் வீதியில் உள்ள இலங்கை இராச விமானப் படையின் விமானப்படையாணைத் தலைவர், கட்டுநாயக்காவில் இருக்கும் இலங்கை இராசவிமானப்படை நிலையத்தில் இரண்டு மரவேலை யந்திரங் களுக்கான தூசி எடுக்கும் பொறிக்கூறைக்கீழே தரப்பட்டிருக்கும் விபரங் களின்படி கொடுத்து அதை அமைப்பதற்குரிய அரக்கு முத்திரையிடப் பட்ட ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்களை 1960 ம் ஆண்டு மே மாதம் 6 ஆம் திகதி மு. ப. 9.30 மணிவரை ஏற்றுக்கொள்ளுவார் :—

1. 400 வோல்ற், 3 பேஸ், 50 சைக்கிள் உதவலுக்கு ஏற்புடைத் தான மோட்டரைஸ்ற் எக்சோஸ்ற் விசிறிக் கூறை சயிக்கிளோன் தூசிச் சேகரிப்புப் பொறியுடன் ஏற்படுத்திக் கொடுத்தல்.

2. மோட்டரைஸ்ற் விசிறிக் கூறுக்கும் சயிக்கிளோனுக்கும் வேண்டிய ஆதார உருக்குக் கட்டுக்களையும், குறித்தவிரு மரவேலை யந்திரங்களுக்கு ஏற்புடைத்தான சகல குழாய்கள் மூடிகள் உட்படவுள்ளனவற்றையும் ஆதாரவார்களையும் ஏற்படுத்திக் கொடுத்தல்.

3. இதற்கான இடத்தில் குறித்த இரு மரவேலை யந்திரங்களுக்கும் வேண்டிய தூசி எடுக்கும் கூறுவதற்கான மோட்டரைஸ்ற் விசிறி, சயிக்கிளோன் டக்ரிங், உருக்குக் கட்டு ஆகியவற்றை நிறுவுதல்.

2. கொழும்பு, பார்சன்ஸ் வீதியில் உள்ள விமானப்படை ஆணைத் தலைவரிடம் இருந்து பெற்றபாலவாய பத்திரங்களில் ஒப்பந்தக் கேள்வி சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். ஒப்பந்தக் கேள்விப் பத்திரம் பிறப்பிக்கப் படுமுன் ஒப்பந்தக் கேள்வி வைப்புப்பணமாக ரூ. 50 கொழும்பு, பார்சன்ஸ் வீதியில் உள்ள சிவில் பரிபாலன உத்தியோகத்தரிடம் செலுத்தப்பட வேண்டும்.

3. ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படுவதைப் பார்ப்பதன் பொருட்டு ஒப்பந்தக் கேள்விக்காரர் 1960 ம் ஆண்டு மே மாதம் 6 ஆம் திகதி மு. ப. 9.30 மணிக்கு விமானப்படைத் தலைமைக் காரியாலயத்தில் சமூகமாயிருக்கலாம்.

ஜே. எல். பார்க்கர்,
எயர் வைஸ் மார்ஷல்,
விமானப்படை ஆணைத்தலைவர்.

## தபாற் தந்திப் பகுதி

### தந்திக் கம்பங்களை ஏற்றிச் சென்று பங்கீடு செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள்

ஏறக்குறைய 35 தொன் 7 அந்தர் 2 குவாட்டர் 15 இருத்தல் நிறையுள்ள 165 கம்பங்களை பதுளை புகையிரத நிலையத்திலிருந்து 55¼ மைல் தூரத்திலுள்ள மாப்பக்கடவாவை வரையும் ஏற்றிச் சென்று அவற்றை மாப்பக்கடவாவையிலிருந்து 5¼ மைல் தூரத்திலுள்ள அளுத்னுவரை வரையும் ஏறக்குறைய 60 யார் இடைவெளிகளில் பங்கீடு செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள், 1960 ம் ஆண்டு வைகாசி மாதம் 20 ந் திகதி மு.ப. 9.30 மணிவரையும் மத்திய தந்திக் கந்தோர், தெலிபோன் தந்தி பிரதான இஞ்சினியரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திர விண்ணப்பங்கள், கொழும்பு, மத்திய தந்திக் கந்தோர் தந்தி தெலிபோன் பிரதான இஞ்சினியரிடமிருந்து பெற்ற பத்திரங்களில் (இரட்டைப் பிரதிகளில்) அனுப்பப்படல் வேண்டும். கொழும்பு, மத்திய தந்திக் கந்தோர் தந்திக் காசாளரிடம் அல்லது வெளியிடமாயின் அப் பகுதி தபாற் கந்தோர்த் தலைவரிடம், கேள்விப் பொறுப்புப் பணமாக ரூபா 25.00 கட்டிப் பெற்ற பற்றுச் சீட்டைச் சமர்ப்பிப்பவர்களுக்கே கேள்விப் பத்திர விண்ணப்பங்கள் வழங்கப்படும்.

கேள்விப் பத்திர விண்ணப்பங்கள் 1960 ம் ஆண்டு வைகாசி மாதம் 19 ந் திகதி பி.ப. 4 மணிவரை வழங்கப்படும்.

ஒப்பந்தத்தை முறைப்படி நிறைவேற்ற, இரண்டு ஒப்பந்தங்களைப் பெறுவதற்காக இரண்டு உத்தரவாதிகளை தமது செலவிலேயே தருவதற்கு தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திர விண்ணப்பதாரர் தேவையானபோது வேண்டப்படுவார்.

ஒப்பந்தத்தை முறைப்படி நிறைவேற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் கேள்விப்பத்திர மதிப்பின் 5 வீதத் தொகையை தபாற் தந்தித் தலைமை அதிபதியிடம் காசாக பிணைப்பணம் கட்ட வேண்டப்படுவதுடன் ஒப்பந்தத்திற் சேரும்போது, உடன்படிக்கையில் முத்திரைச் சட்டப்படி, முத்திரைகளை ஒட்டவும் கடமைப்பட்டவராவர்.

கேள்விப் பத்திர முடிவு திகதியிலிருந்து குறைந்தது அறுபது (60) நாட்கள் வரை கேள்விப்பத்திரங்கள் ஒப்புக் கொள்வதற்குத் தகுதியானவையாக இருத்தல் வேண்டும்.

1960 ம் ஆண்டு வைகாசி மாதம் 20 ந் திகதி மு.ப. 10 மணிக்கு தெலிபோன் தந்தி பிரதான இஞ்சினியர் காரியாலயத்தில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்பொழுது கேள்விப் பத்திர விண்ணப்பதாரர்கள் சமூகமளிக்கலாம்.

எச். ஈ. செனவிரத்தின,
தபாற் கந்தோர்த் தலைமை அதிபதி.

பிரதம தபாற் கந்தோர், கொழும்பு 1,
1960 ம் ஆண்டு எப்றில் மாதம் 9 ம் திகதி.

---

## பா தந்திப் பகுதி

### தந்திக் கம்பங்களை ஏற்றிச் சென்று பங்கீடு செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள்

ஏறக்குறைய 111 தொன் 9 அந்தர் 3 குவாட்டர் 18 இருத்தல் நிறையுள்ள 540 தண்டவாளங்களை பதுளை புகையிரத நிலையத்திலிருந்து 37 மைல் தூரத்திலுள்ள பிபிலைவரையும் ஏற்றிச் சென்று அவற்றை பிபிலையிலிருந்து 18 மைல் தூரத்திலுள்ள படியதலாவை வரையும் ஏறக்குறைய 60 யார் இடைவெளிகளில் பங்கீடு செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் 1960 ம் ஆண்டு வைகாசி மாதம் 20 ந் திகதி மு.ப. 9.30 மணிவரை மத்திய தந்திக் கந்தோர், தெலிபோன் தந்திப் பிரதான இஞ்சினியரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திர விண்ணப்பங்கள், கொழும்பு, மத்திய தந்திக் கந்தோர் தந்தி தெலிபோன் பிரதான இஞ்சினியரிடமிருந்து பெற்ற பத்திரங்களில் (இரட்டைப் பிரதிகளில்) அனுப்பப்படல் வேண்டும். கொழும்பு, மத்திய தந்திக் கந்தோர் தந்திக் காசாளரிடம் அல்லது வெளியிடமாயின் அப்பகுதி தபாற் கந்தோர்த் தலைவரிடம், கேள்விப் பொறுப்புப் பணமாக ரூபா 25.00 கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பவர்களுக்கே கேள்விப் பத்திர விண்ணப்பங்கள் வழங்கப்படும்.

கேள்விப் பத்திர விண்ணப்பங்கள் 1960 ம் ஆண்டு வைகாசி மாதம் 19 ந் திகதி பி.ப. 4 மணிவரை வழங்கப்படும்.

ஒப்பந்தத்தை முறைப்படி நிறைவேற்ற, இரண்டு ஒப்பந்தங்களைப் பெறுவதற்காக இரண்டு உத்தரவாதிகளை தமது செலவிலேயே தருவதற்கு தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திர விண்ணப்பதாரர் தேவையானபோது வேண்டப்படுவார்.

ஒப்பந்தத்தை முறைப்படி நிறைவேற்றுவதற்காக தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர் கேள்விப் பத்திர மதிப்பின் 5 வீதத் தொகையை தபாற் தந்தித் தலைமை அதிபதியிடம் காசாக பிணைப்பணம் கட்ட வேண்டப்படுவதுடன் ஒப்பந்தத்திற் சேரும்போது உடன்படிக்கையில் முத்திரைச் சட்டப்படி, முத்திரைகளை ஒட்டவும் கடமைப்பட்டவராவர்.

கேள்விப்பத்திர முடிவு திகதியிலிருந்து குறைந்தது அறுபது (60) நாட்கள் வரை கேள்விப்பத்திரங்கள் ஒப்புக்கொள்வதற்குத் தகுதியானவையாக இருத்தல் வேண்டும்.

1960 ம் ஆண்டு வைகாசி மாதம் 20 ந் திகதி மு.ப. 10 மணிக்குத் தெலிபோன் தந்தி பிரதான இஞ்சினியர் காரியாலயத்தில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்பொழுது கேள்விப்பத்திர விண்ணப்பதாரர்கள் சமூகமளிக்கலாம்.

எச். ஈ. செனவிரத்ன,
தபாற் கந்தோர்த் தலைமை அதிபதி.

பிரதம தபாற் கந்தோர், கொழும்பு 1,
1960 ம் ஆண்டு எப்றில் மாதம் 9 ம் திகதி.

---

## தபாற் தந்திப் பகுதி

### பிரதம தபாற் கந்தோர்ப் போக்குவரத்துச் சேவையின் பாவனையற்ற தபால் வான்களை விலைக்கு வாங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள்

கீழ்க் குறிப்பிடும் பாவனையற்ற தபால் வான்களை விலைக்கு வாங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள், 1960 ம் ஆண்டு மே மாதம் 31 ந் திகதி மு.ப. 10 மணிவரை, கொழும்பு பிரதம தபாற் கந்தோர், தபாற் கந்தோர்த் தலைமை அதிபதியால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | | | |
|---|---|---|---|
| (1) | மொறிஸ் கொமேர்ஷல் தபால் வான் | சி உவை | 7990 |
| (2) | ,, | சி உவை | 7992 |
| (3) | ,, | சி உவை | 7995 |
| (4) | ,, | சி உவை | 7988 |
| (5) | ,, | சி உவை | 7989 |
| (6) | ஒஸ்ரீன் தபால் வான் | சி உவை | 9605 |
| (7) | ,, | சி உவை | 7987 |
| (8) | போர்ட்சன் தபால் வான் | சி எல் | 4624 |
| (9) | ,, | சி என் | 673 |
| (10) | ,, | சி எல் | 4625 |
| (11) | ,, | சி என் | 2413 |

முழு விபரங்கட்கு இதே வர்த்தமானியின் 1 ம் பகுதி 2 ம் தொகுதி (ஆங்கில விளம்பரங்கள்)யைப் பார்க்கவும்.

எச். ஈ. செனவிரத்ன,
தபாற் கந்தோர்த் தலைமை அதிபதி.

பிரதம தபாற் கந்தோர், கொழும்பு 1,
1960 ம் ஆண்டு எப்றில் மாதம் 12 ம் திகதி.

---

## கொட்டியாகல குடியேற்ற குடிசைகளின் கூரை திருத்தல்

மொன்றுகல டிஸ்திறிக் அதிபர் கொட்டியாகல குடியேற்ற குடிசைகளின் கூரைகள் திருத்துதற்கு 9.5.60 முற்பகல் 12 மணிவரை கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்வார்.

கேள்விப் பத்திரங்கள் மொன்றுகல அதிபர் இடம் ரூ. 10 இலங்கையில் உள்ள எந்த கச்சேரியிலும் கட்டிய பற்றுச் சீட்டு சமர்ப்பிப்போருக்கு 5.5.60 பகல் 12 மணிவரையில் வழங்குவார்.

கேள்விப் பத்திரங்கள் சீல்வைத்த என்வலப்பில் " கொட்டியாகல குடிசைகளின் கூரை திருத்த கேள்விப்பத்திரம் " என எழுதி மொன்றுகல அதிபருக்கு அனுப்புதல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் றிஜிஸ்றர் செய்து அனுப்பலாம் அல்லது கச்சேரியில் முதன்மையாளர் இடம் உள்ள கேள்விப் பத்திர பெட்டியில் போடலாம்.

மொன்றுகல அதிபருக்கு எந்த கேள்விப் பத்திரத்தையும் ஏற்கவும் அல்லது விடவும் அல்லது ஒரு பகுதி கேள்வியை ஏற்கவும் அதிகாரமுண்டு.

வி. பீ. சில்வா,
மொன்றுகல அதிபருக்காக.

மொன்றுகல கச்சேரி,
1960 ம் ஞூ எப்றில் மீ 6 ந உ.

## கட்டுநாயக்கா ஆகாய விமானப்படைத் தளத்தில் உள்ள தேங்காய் விற்பனவு

கட்டுநாயக்கா, ஆகாய விமானப்படைத் தளத்தில் உள்ள ஏறக்குறைய 144,000 தேங்காய்களை விற்றுக்கொள்வதற்கு, 1960 ம் ஆண்டு சித்திரை மாதம் 30 ம் தேதி சனிக்கிழமை பகல் 12 மணி வரைக்கும், மெழுகச்சிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை, கொழும்புக் கச்சேரி அரசாங்க அதிபர் ஏற்றுக்கொள்வார்.

2. கொழும்புக் கச்சேரியில் பெற்றுக் கொள்ளும் மாதிரிப் பத்திரங்களில்தான் கேள்விகள் அனுப்பவேண்டும். ஒப்பந்தக் கேள்விகள் இரு பிரதிகளில், மெழுகச்சிட்டு கேள்விக்காரரின் கையெழுத்திடப்பட்டு, அரசாங்க அதிபர், கொழும்புக் கச்சேரி என மேல்விலாசம் இடப்படல் வேண்டும். ஒப்பந்தக் கேள்வி கொண்ட உறைகளில், அவற்றின் இடது பக்கத்தில் " கட்டுநாயக்கா, ஆகாயவிமானப்படைத் தளத்தில் உள்ள தேங்காய் வாங்குவது பற்றிய ஒப்பந்தக் கேள்வி " என எழுதி அனுப்பப்படல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்கள், கடைசித் தேதி 10 மணி காலை வரைக்கும், ரூபா 100 கட்டப்பட்ட பற்றுச்சீட்டைக் காட்டிய பின் தான் வழங்கப்படும். கட்டுப்பணம், கொழும்புக் கச்சேரியில் கட்டுப்படல் வேண்டும். எவருடைய கேள்விப் பத்திரம் ஏற்கப்பட்டதோ, அவரது கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டதென அறிவிக்கும் கடிதம் கிடைத்த பத்து (10) நாட்களுக்குள் முழுத் தொகையையும் கட்டித் தேங்காய்களை எடுத்துச் செல்ல வேண்டும். அப்படிச் செய்யத் தவறின் அவருடைய கட்டுப்பணம் பறிமுதல் செய்யப்பட்டு, அவரது பெயரைத் " தவறுன கேள்விக்காரர் " என்னும் இடாப்பில் சேர்க்கவேண்டிவரும். அரசாங்கம் அவரிடம் வைத்துள்ள வேறு எந்தத் தொடர்புக்காவது இரக்கம் காட்டமுடியாது.

4. பதிவு செய்த தபாலில், அரசாங்க அதிபர், கொழும்பு எனும் விலாசத்திற்கு கேள்விப் பத்திரம் அனுப்பல் வேண்டும் அல்லது இதற்கென கொழும்புக் கச்சேரியில் வைக்கப்பட்ட பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விக்காரரின் பெயரும் விலாசமும் உறையில் குறிக்கப்பட வேண்டும்.

5. விரும்பினுல், கேள்விப் பத்திரம் உடைக்கப்படும் நேரத்தில் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படும். கொழும்புக் கச்சேரியில் கேள்விப் பத்திரம் யாவும் 1960 ம் ஆண்டு, ஏப்றில் மாதம் 30 ம் தேதி பகல் 12 மணிக்குத் திறக்கப்படும்.

6. அதற்கெனக் கொடுக்கப்படும் பாரத்தின்படியில்லாது அதன்படி சொல்லப்பட்ட நிபந்தனைக் கடங்காத கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப் படமாட்டா. கட்டுப் பணம் கட்டிய றிசீற் துண்டு இல்லாத கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படாது. மையினுலேயே தெளிவாக கேள்வியின் விகிதம், தொகை முதலியவற்றை எழுதவேண்டும். திருத்தம் ஏதாகிலும் உண்டாயின் அவற்றை கேள்விக்கார்ரின் சுருக்குக் கையெழுத்திட்டு உறுதி பண்ணல் வேண்டும்.

7. கேள்விக்காரர் தங்கள் முழுவிலாசத்தையும், மாதிரிப் பத்திரத்தில் கொட்டை எழுத்துக்களில் எழுத வேண்டும்.

8. கேள்விக்காரர், ரெண்டர் பத்திரம் யாவும் மூடப்படும் தேதியில் இருந்து 3 கிழமைவரைக்கும், தங்கள் கேள்விகளை அனுமதிக்கப்படும் வரை காத்திருக்க வேண்டும்.

9. கொழும்பு அரசாங்க அதிபர் எந்தக் கேள்விப்பத்திரத்தையும் மறுக்கவோ, அல்லது எதிலும் ஓர் பகுதியை ஏற்கவோ உரிமையுடையவராவர்.

10. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் தன் வேலைகளைச் செய்விப்பதற்கு இலங்கைத் தொழிலாளரை மாத்திரம் உபயோகிக்கவேண்டும். இலங்கையாளர் என்பதை வம்சாவழியான இலங்கைப் பிரஜையானவர், அல்லது பதிவு செய்யப்பட்ட பிரஜை எனவே கருதல் வேண்டும்.

11. கேள்விக்காரருக்கு விடப்படும் நோட்டிஸ்யாவும் அவருக்கு நேரிலேயே வழங்கப்பட்டோ, அல்லது அவரால் கொடுக்கப்பட்ட விலாசத்திற்கே தபால் மூலம் அனுப்பப்பட்டோ இருந்தால், அவருக்கு அவற்றை வழங்கியதாகவே கருதப்படும்.

12. கேள்விப்பத்திரக்காரன் தன் கீழ் உள்ள சிப்பந்தியாருக்காகவென்றுலும், அவர் கோரும் நட்டம் எதையும், 1934 ம் ஆண்டின் 19 ம் இலக்க தொழிலாளர் நட்ட ஈட்டு ஆக்ஞைப்படி (அத்தியாயம் 117) நட்டம் கட்டல் வேண்டும்.

13. அரசாங்கத்திற்கு திருப்தியில்லாத எந்த வேலையாளையோ, அல்லது வேலையாட்களையோ, வைத்து வேலைசெய்விக்க தடுப்புக் கூறுவதற்கு அரசாங்கம் உரிமை உடையது.

14. அரசாங்கத்தினரால் " தவறுன கேள்வி ஒப்பந்தக்காரர் " என்னும் இடாப்பில் சேர்க்கப்பட்ட தனித்துள்ளவர், அல்லது கூட்டு ஒப்பந்தம் செய்யும் எந்த ஒப்பந்தக்காரனுடனும். ஒப்பந்தம் செய்ய முடியாது. அரசாங்க அதிபரின் அறிவுக்கெட்டிய போதிய காரணங்கள் இருக்குமாயின் ஒப்பந்தம் பண்ணுது மறுக்கலாம்.

15. தேங்காய்களைத் தெரிந்து எடுக்காது, காசைக்கட்டி, அப்புறப் படுத்தல் வேண்டும்.

16. மற்றும் மேற்படி தகவல்களை கொழும்பு அரசாங்க அதிபர் அல்லது பிரிவுக் காரியாதிகாரி, நீர்கொழும்பு என்போருக்கு மனுச் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

ஜீ. பி. தம்பையா,
அரசாங்க அதிபர்,
கொழும்பு டிஸ்திறிக்.

கொழும்புக் கச்சேரி,
1960 ம் ஆண்டு சித்திரை மீ 14 ந உ.

---

## விளம்பரம்

1960 ம் ஆண்டு வைகாசி (மே) மாதம் 10 ந் திகதி செவ்வாய்க் கிழமையும், 11 ந் திகதி புதன் கிழமையும் அரசாங்க விடுமுறை நாட்களாதலால், 1960 ம் ஆண்டு வைகாசி (மே) மாதம் 13 ந் திகதி பிரசுரிக்கப்படவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படவேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1960 ம் ஆண்டு வைகாசி (மே) மாதம் 6 ந் திகதி வெள்ளிக் கிழமை பி. ப. 4 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென்று இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1960 ம் ஆண்டு சித்திரை (ஏப்றில்) மீ 9 ந உ.

பேர்னுர்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது